FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319437

1. District : கடலூர் PS: உ.நி.க.பிரிவு Year: 2026 FIR No. 6 Date: 08.08.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: மற்றும் அதன் திருத்தம் செய்யப்பட்ட The Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Bharatiya Nagarik Suraksha Sanhita Sections பிரிவுகள்: 106
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 07.08.2026 Date to : 07.08.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : 17.00 hrs Time to : 21.00 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 08.08.2026 Time : 12.30 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Vol-III Time : 12.30 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் நேரில் தட்டச்சு புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எந்திசையும் சுமார் 20 கி.மீ. தென்மேற்கே,

Beat Number : (b) Address : சார் பதிவாளர் அலுவலகம், மாயன் வளாகம்
முதற் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : P. பிரிதரன் (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address : மாவட்ட சுற்றுச்சூழல் அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், கடலூர்.
தொழில் முகவரி
சுற்றுச்சூழல் அலுவலர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. பா. அனந்தகோபன், உதவியாளர், (ஓய்வுபெற்ற) சார் பதிவாளர், மன்னார்குடி
சார் பதிவகம், கடலூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை.

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

நனிநீநாளிவ் இணைக்கப்படவில்லை.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge of the Police Station
காவல் நிலைய பொறுப்பு அதிகாரியின் ஒப்பம்

S. SUNDRARAJ

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் .....
Rank: நிலை Sub Inspector of Police No.எண் .....
VAC, Cuddalore

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நான் இன்று 08.08.2026 ஆம் தேதி பகல் 12.30 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, திரு.P.ஸ்ரீதரன், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர்.P.ஸ்ரீதரன், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், கடலூர். பெறுநர். காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். ந.க.எண். ஆகு1/437, நாள்:08.08.2026, பொருள்: திடீர் ஆய்வு சோதனை – பெண்ணாடம் சார்பதிவகம் – கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் ரொக்கப்பணம் ஒப்படைப்பு – நடவடிக்கை வேண்டி புகார் மனு சமர்ப்பித்தல் – சம்மந்தமாக. நான் கடலூர் மாவட்ட ஆட்சியரகம் ஆய்வுக்குழு அலுவலகத்தில், துணை ஆய்வுக்குழு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் நேற்று 07.08.2026 ஆம் தேதி 14.00 மணியளவில் அலுவலகத்தில் பணியிலிருந்தபோது கடலூர் மாவட்டம் பெண்ணாடம் சார்பதிவாளர் அலுவலகத்தில், பத்திரப்பதிவுக்காக அலுவலகம் வரும் பொதுமக்களிடம் ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலம் லஞ்ச பணம் பெற்று வைத்துள்ளார்கள் என்ற ரகசிய தகவல் எனக்கு கிடைத்தது. பின்னர் உடனடியாக நான் புறப்பட்டு எங்களது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகே இருக்கும் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு மதியம் சுமார் 14.30 மணிக்கு வந்து அங்கு பணியில் இருந்த காவல் ஆய்வாளர் ச.சுந்தரராஜ் அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தும், மேற்படி பெண்ணாடம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு மதியம் சுமார் 16.30 மணிக்கு மேல் சென்றால் அங்கு பெண்ணாடம் சார் பதிவாளர் அவர்களுக்கு கொடுக்க உள்ள மற்றும் ஏற்கனவே பெற்று வைத்துள்ள பணத்தை திடீர் ஆய்வு செய்து கைப்பற்றலாம் என நான் கூறியதன் அடிப்படையில், காவல் ஆய்வாளர் திரு.ச.சுந்தரராஜ் அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். பின்னர் நானும், காவல் ஆய்வாளர் திரு.ச.சுந்தரராஜ் மற்றும் அவரது காவல் குழுவினர்களும் மதியம் சுமார் 15.00 மணிக்கு இரண்டு அரசு வாகனங்களில் புறப்பட்டு பெண்ணாடத்தில் கிழக்கு மேற்காக செல்லும் விருத்தாசலம் – திட்டக்குடி மெயின் ரோட்டின் வடக்கு

8/8/26

புறமாக அமைந்துள்ள பெண்ணாடம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சற்று தொலைவில் வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் பெண்ணாடம் சார் பதிவாளர் அலுவலகத்தை கண்காணித்து பின்னர் மாலை சுமார் 17.00 மணிக்கு தெற்கு பார்த்தவாறு உள்ள நுழைவு வாயில் வழியாக சென்று, அதே திசையில் அமைந்துள்ள பெண்ணாடம் சார் பதிவாளர் அலுவலக கட்டிட வளாகத்திற்குள் சென்று மெயின் கேட்டை அடைத்து பாதுகாப்பிற்கு காவலரை நியமித்து பின்னர் அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். பிரதான வாயிலை அடுத்து உள்ள பெரிய ஹாலின் இடது புறம் உள்ள இருக்கையில் அமர்ந்திருந்த சார் பதிவாளர் அவர்களிடம் என்னையும், காவல் ஆய்வாளர் மற்றும் ஆய்வு குழுவினரையும் அடையாள அட்டையை காண்பித்து அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர் சார் பதிவாளர் அவர்களை விசாரித்தபோது அவர் தனது பெயர் பா.ஆனந்தகுமார், வயது 37, த/பெ பாண்டியன், உதவியாளர், விருத்தாசலம் இணை-1 சார்பதிவகம் என்றும், தற்போது பெண்ணாடம் சார்பதிவகத்தில் பொறுப்பு சார்பதிவாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். உடன் அலுவலகத்தில் இருந்த நபர்களை விசாரித்தபோது, (1) அ.தமிழ்செல்வன், த/பெ, அய்யாசாமி, இளநிலை உதவியாளர் (2) ரா.நிவாஸ் கிருஷ்ணன், த/பெ ராஜமாணிக்கம், Camera Opertaer (TCS -ZICMA), (3) பெ.சிங்காரவேலன், த/பெ, பெரியசாமி, Data Entry Operator (TCS -ZICMA) என்று தெரிவித்தனர். பின்னர் நான் மேற்படி அலுவலகத்தை ஆய்வு செய்ய போகும் விவரத்தை அவர்களிடம் தெரிவித்து, சோதனைக்கு உடனிருந்து ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொண்டேன். மேலும் சோதனையை துவக்குவதற்கு முன்னர், குழுவில் இடம் பெற்றிருந்த அனைவரும் அங்கிருந்தவர்கள் முன்னிலையில் சுய சோதனை செய்து குழுவினரிடம் பொருளோ, பணமோ இல்லை என்பதை தெரியப்படுத்தினோம். மேற்படி பெண்ணாடம் சார்பதிவாளர் அலுவலகமானது சுற்றுசுவற்றுடன் கூடிய அரசு கட்டிடமாகும். இதன் பிரதான வாயிற்படி தெற்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலகத்தின் வராண்டா சுமார் 13 க்கு 12 அடி நீள அகலமுள்ளது. அதனை அடுத்து 18 க்கு 20 அடி நீள அகலமுள்ள ஹால் உள்ளது. அந்த ஹாலின் இடதுபுறம் 4 க்கு 12 அடி நீள அகலமுள்ள கழிவறை உள்ளது. அந்த ஹாலின் வலது புறம் முதல் தளத்திற்கு செல்லும் படிக்கட்டுகள் உள்ளது. அந்த ஹாலைத்தொடர்ந்து 34 க்கு 20 அடி நீள அகலமுள்ள பெரிய ஹால் உள்ளது. அந்த பெரிய ஹாலின் வடமேற்கு திசையில் கிழக்கு பார்த்து சார் பதிவாளர் அவர்களின் இருக்கை உள்ளது. அதில் அமர்ந்திருந்த பொறுப்பு சார் பதிவாளர் ஆனந்தகுமார் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.700/- இருந்தது. அந்த பணத்தை பற்றி அவரிடம் கேட்டபோது அது தனது சொந்த செலவுக்காக வைத்திருப்பதாகவும் அதனை அலுவலக தனிநபர் கையிருப்பு

8/8/26

பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாக தெரிவித்ததால் அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவரது இருக்கையை தொடர்ந்து Data Entry Operator- ன் இருக்கை உள்ளது. அதில் அமர்ந்திருந்த Data Entry Operator திரு.சிங்காரவேலன் என்பவரை சோதனை செய்ய அவரிடம் கைப்பற்றக்கூடிய பணமோ ஆவணமோ எதுவும் இல்லை. அதனை தொடர்ந்து அந்த பெரிய ஹாலின் வலது பக்கத்தில் மேற்கு பார்த்தவாறு 12 க்கு 10 அடி நீள அகலமுள்ள ஒரு கண்ணாடி அறை உள்ளது. அந்த அறையில் வலது பக்கத்தில் மேற்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த இளநிலை உதவியாளர் தமிழ்செல்வன் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.110/- இருந்தது. அந்த பணத்தை பற்றி அவரிடம் கேட்டபோது அது தனது சொந்த செலவுக்காக வைத்திருப்பதாகவும் அதனை அலுவலக தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாக தெரிவித்ததால் அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அந்த அறையின் இடது பக்கத்தில் மேற்கு பார்த்தவாறு அமர்ந்திருந்த Camera Operator திரு.நிவாஸ் கிருஷ்ணன் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.340/- இருந்தது. அந்த பணத்தை பற்றி அவரிடம் கேட்டபோது அது தனது சொந்த செலவுக்காக வைத்திருப்பதாகவும் அதனை அலுவலக தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாக தெரிவித்ததால் அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அந்த பெரிய ஹாலின் வடகிழக்கு திசையில் மேற்கு பாரத்தவாறு 4க்கு 10 அடி நீள அகலமுள்ள ஒரு கழிவறையும் தெற்கு பார்த்த ஒரு கழிவரையும் உள்ளது. மேலும் பெரிய ஹாலின் இடதுபக்கத்தில் வடக்கு பார்த்தவாறு இருந்த ஒரு அறையின் வெளியில் நின்றிருந்த ஒரு நபரை விசாரிக்க அவரது பெயர் க.வீரமுத்து த/பெ.கலியன், அம்பேத்கர் நகர், பெண்ணாடம் என்றும் அவர் பெண்ணாடம் சார் பதிவாளர் அலுவலகத்தில் தூய்மை பணி மற்றும் டீ வாங்கி கொடுக்கும் வேலை செய்வதாக தெரிவித்தார். மேலும் அவருக்கான ஊதியத்தை சார் பதிவாளர் ஆனந்தகுமார் கொடுப்பார் என்றும் பத்திர பதிவுக்கு வரும் ஆவண எழுத்தர்களும் அவ்வப்போது செலவுக்கு பணம் கொடுப்பார்கள் என்று தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது அவரிடம் கைப்பற்றக்கூடிய பணமோ ஆவணமோ எதுவும் இல்லை. அதனை தொடர்ந்து மேற்படி 10க்கு 12 அடி நீள அகலமுள்ள பழைய பதிவேடுகள் வைத்திருக்கும் அறைக்குள் சென்றபோது அங்கு இரண்டு பெண்கள் இருந்தனர் அவர்களை விசாரிக்க முதலாம் நபர் பெயர் திருமதி.சங்கரி க/பெ அருள், 15/3, இறையூர், திட்டக்குடி தாலுக்கா, கடலூர் மாவட்டம் என்றும் அவர் பெண்ணாடம் சார் பதிவாளர் அலுவலகம் எதிரில் உள்ள பா.செல்வராஜா என்ற பத்திரப்பதிவு எழுத்தர் அலுவலகத்தில் தட்டச்சு செய்யும் பணி செய்து வருவதாகவும், திட்டக்குடி வட்டம் திருமலை அகரம் என்ற ஊரைச்சேர்ந்த காலஞ்சென்ற

8/8/26

பரமசிவம் மனைவி உமா என்பவரின் மகள்கள் அபிராமி, கஸ்தூரி ஆகியோர் விக்னேஷ் என்பவருக்கு எழுதிக்கொடுக்கும் பாக பாத்திய விடுதலை பத்திர வரைவை காட்டி அனுமதி பெற பெண்ணாடம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்தாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் கைப்பற்றக்கூடிய பணமோ ஆவணமோ எதுவும் இல்லை. அந்த அறையில் வடக்கு பார்த்தவாறு இருக்கையில் அமர்ந்திருந்த பெண்ணை விசாரிக்க அவரது பெயர் திருமதி.வாசுகி க/பெ சேகர், கதவு எண்.358- மேலத்தெரு, ஸ்ரீஆதிவராகநல்லூர், ஸ்ரீமுஷ்ணம் தாலுக்கா, கடலூர் மாவட்டம் என்றும் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவரை எழுத்தர் இல்லாத காரணத்தால் வில்லங்க சான்று எழுதி கொடுக்கும் வேலைக்காக பொறுப்பு சார் பதிவாளர் திரு.ஆனந்தகுமார் அவர்கள் மூலம் பணியமர்த்தப்பட்டிருப்பதாகவும், தினமும் சார் பதிவாளர் ஆனந்தகுமார் ஊதியம் கொடுப்பதாகவும் மேலும் பத்திர பதிவுக்கு வரும் ஆவண எழுத்தர்கள் செலவுக்கு பணம் கொடுப்பார்கள் என்றும் தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் கைப்பற்றக்கூடிய பணமோ ஆவணமோ எதுவும் இல்லை. அதன் பிறகு அந்த அறையை சோதனை செய்ய கிழக்கு பார்த்தவாறு இருந்த ஜந்தடுக்கு கொண்ட இரும்பு பீரோவில் மூன்றாவது அடுக்கில் பழைய பதிவேடுகளுக்கு இடையில் 500, ரூபாய் நோட்டுகள் இருந்தது. அதனை எண்ணிப்பார்க்க அதில் ரூ.7,500/- (15 x 500) பணம் இருந்தது. அந்த பணத்தை பற்றி விசாரிக்க அதனை யாரும் உரிமை கோராததால் அது லஞ்சப்பணமாக இருக்கலாம் என கருதி மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனையடுத்து பெரிய ஹாலின் வலதுபக்கத்தில் மேற்கு பார்த்தவாறு கதவு கொண்ட 10க்கு 20 அடி நீள அகலமுள்ள கணினி அறை உள்ளது. அந்த அறையை சோதனை செய்ய வடக்கு பார்த்தவாறு ஜந்தடுக்கு கொண்ட சிமெண்டாலான கப்போர்டு இருந்தது. அந்த கப்போர்டின் மூன்றாவது அடுக்கில் உள்ள அட்டை பெட்டிகளுக்கு இடையில் 500, 200, 100 ரூபாய் நோட்டுகள் இருந்தது. அதனை எண்ணிப்பார்க்க அதில் ரூ.54,000/- (104 x 500, 4 x 200, 12 x 100) பணம் இருந்தது. அந்த பணத்தை பற்றி விசாரிக்க அதனை யாரும் உரிமை கோராததால் அது பத்திரப்பதிவுக்கு வரும் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட லஞ்சப்பணமாக இருக்கலாம் என கருதி மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் முதல் தளத்திற்கு சென்று பார்வையிட முதல்தளம் முழுவதும் ரேக்குகளில் பழைய பதிவேடுகள் அடுக்கி வைக்கப்பட்டு ஆவண அறையாக பயன்படுத்தப்படுவது தெரிய வந்தது. அந்த அறையை சோதனை செய்ய கைப்பற்றக்கூடிய பொருளோ பணமோ எதுவும் இல்லை. பின்னர் மேற்குறிப்பிட்ட (1) பா.ஆனந்தகுமார், வயது 37, த/பெ பாண்டியன், உதவியாளர், பொறுப்பு சார் பதிவாளர், பெண்ணாடம் சார்பதிவகம் (2)

8/8/26

திருமதி.சங்கரி க.பெ அருள், 15/3, இறையூர், திட்டக்குடி தாலுக்கா, கடலூர் மாவட்டம் (3) திருமதி.வாசுகி க/பெ சேகர், கதவு எண்.358- மேலத்தெரு, ஸ்ரீஆதிவராகநல்லூர், ஸ்ரீமுஷ்ணம் தாலுக்கா, கடலூர் மாவட்டம் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டது. பின்னர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் 1) தனி நபர் பண இருப்பு பதிவேடு, 2) பணியாளர்களின் வருகை பதிவேடு, 3) இன்று 07.08.2026 ஆம் தேதி பெண்ணாடம் சார் பதிவாளர் அலவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் விபரங்கள் ஆகியவற்றை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மொத்த பணம் ரூ.61,500/- (500x119, 200x4, 100x12) மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் ஆய்வின்போது பொறுப்பு சார் பதிவாளர் திரு.ஆனந்தகுமார் அவர்களின் கைப்பேசியை வாங்கி G-Pay செயலியை எனது முன்னிலையில் காவல் குழுவினர் பார்வையிட்டதில், 9791985125 என்ற கைப்பேசி எண்ணில் SBI வங்கி கணக்கு எண்.33966092536 என்ற கணக்கில் 2026 வருடம் மார்ச் மாதம் ரூ.1,21,001/-, ஏப்ரல் மாதம் ரூ.33,000/-, மே மாதம் 13,220/- ஜூன் மாதம் ரூ.47,300/-, ஜூலை மாதம் ரூ.10,500/-, ஆகஸ்டு மாதம் 7 ஆம் தேதி வரை ரூ.14,000/- என ஆக மொத்தம் ரூ.2,39,021/- சந்தேகத்திற்குரிய பண வரவு பரிவர்த்தனை செய்யப்பட்டது தெரிய வந்தது. பின்னர் அவரது கைப்பேசியை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. நேற்று 07.08.2026 ந் தேதி எனது தலைமையிலான திடீர் ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.61,500/-, 1) சார்பதிவாளர் (பொறுப்பு) திரு.ஆனந்தகுமார், 2) திருமதி.வாசுகி, 3) திருமதி.சங்கரி ஆகியோர்களது வாக்குமூலங்கள், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் தயார் செய்யப்பட்ட திடீர் ஆய்வு மகஜர்ஆகியவற்றுடன் இன்று 08.08.2026 ந்தேதி பகல் 12.30 மணிக்கு, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி புகார் மனுவை தங்களிடம் கொடுக்கிறேன். பெண்ணாடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் உயர் அதிகாரிகளின் உரிய அனுமதி பெறாமல் தன்னிச்சையாக தனிநபரை பணிக்கு அமர்த்தியது மற்றும் பத்திர எழுத்தர்களின் உதவியாளரை அலுவலகத்திற்குள் அனுமதித்தது மற்றும் அலுவலகத்தில் கணக்கில் வராத பணம் கைப்பற்றப்பட்டதற்கு பெண்ணாடம் சார்பதிவக பொறுப்பு சார்பதிவாளர் திரு.ஆனந்தகுமார் தான் பொறுப்பு ஆவார். எனவே மேற்படி பொறுப்பு சார் பதிவாளர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் ------ (P.ஸ்ரீதரன்) துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், கடலூர்.

8/8/26

Madam Submitted,

Received the above computer typed complaint on 08.08.2026 at about 12.30 hours, hence I registered a case in Cuddalore Vigilance and Anti-Corruption Cr.No.6/2026, u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 and Section 106 BNSS on 08.08.2026 at 13.00 hours. sd/- xxxx 08.08.2026 (S.SUNDRARAJ), Inspector of Police, V&AC, Cuddalore.

(S.SUNDRARAJ)
Inspector of Police,
V&AC, Cuddalore.